<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

DGM கிராம கோடி என்ற பிளாட்சில் கடைசியாக பிரதிவாதி தான் பிளாட் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அவரிடம் ஏன் ஆவணங்கள் மற்றும் தாய்பத்திரம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் அவர் எனக்கு பணம் தர வேண்டுமென்பதால் தரவில்லை. மேற்படி அசல் ஆவணங்கள் என்னிடம் தான் உள்ளது. DGM சுதர்ஷன் என்ற பிளாட்சில் கடைசியாக பிரதிவாதி தான் பிளாட் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அவரிடம் ஏன் ஆவணங்கள்மற்றும் தாய்பத்திரம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் அவர் எனக்கு பணம் தர வேண்டுமென்பதால் தரவில்லை. மேற்படி அசல் ஆவணங்கள் என்னிடம் தான் உள்ளது. RO பிளாண்ட் மற்றும் 1 கே.வி இன்வெட்டர் எல்லா பிளாட்களுக்கும் இணைத்துள்ளேன். அதற்கான ஆவணம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. சோலார் வாட்டர் ஹீட்டர் இணைத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். DGM திருமலா, DGM கெஜலட்சுமி ஆகிய பிளாட்டுகளில் வேலை முடித்து பிளாட் ஒப்படைத்ததற்கான சான்றிதழ் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். சான்றிதழ் கொடுத்ததை காண்பிக்க ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பிளாட்டுகள் ஒவ்வொன்றிலும் பிரதிவாதி ஒவ்வொரு பிளாட் வாங்கியுள்ளார். அதற்குரிய Occuption Certificate வேலை முடித்ததை காட்டக்கூடிய சான்றிதழ் மேலும் கார் பார்க்கிங், எந்த இடத்தில் கார் பார்க் செய்யவேண்டுமென்று குறியிட்டு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அனைத்தும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர் தான் மேற்படி 4 பிளாட்டுகளிலும் சுவாதீனத்தில் உள்ளார். சுவாதீனத்தில் உள்ளார் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை.

3. வழக்குரையில் சி(6) பரிகாரத்தில் ஆவண எண்.3598/2014 என்ற ஆவணத்தை திருப்பி என்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுள்ளேன். அந்த ஆவணம் 42 சென்டிற்குரிய ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தொடர்பாக பதிவாளர் அலுவலத்தில் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை. DIG பதிவாளர் அவர்கள் மேற்படி ஆவணத்தை பொறுத்து ஒரு நடவடிக்கை எடுத்துள்ளார். அந்த நடவடிக்கையின்

நகல் என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.4 ஆகும். மேற்படி நடவடிக்கையின் நகல் என்னிடமும் உள்ளது. மேற்படி உத்தரவில் 42 சென்ட் முழுவதையும் நான் விற்றுவிட்டேன், பொய்யாக அடமான பத்திரம் செய்துள்ளேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவில் இந்திய பதிவு சட்டம் 82-ன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அதில் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. இது தொடர்பாக தாம்பரம் சிசிடி போலீசில் என் மீது ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை பி.சா.ஆ.5 ஆகும். அந்த பரிகாரம் சி(5)-ல் பிளாட் நம்பர் ஜி.1-ல் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிளாட் தொடர்பாக DIG பதிவாளர் அவர்கள் ஒரு நடவடிக்கை மேற்கொண்டு அந்த நடவடிக்கையில் இது போன்ற ஆவணத்தை வைத்து பல பரிமாற்றம் செய்துள்ளேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் என்னிடமும் உள்ளது. அந்த ஆவணம் பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. என்னிடம் காண்பிக்கப்படும் வில்லங்க சான்றிதழில் பல நபர்களிடம் சொத்து பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அந்த வில்லங்க சான்றிதழ் பி.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட 4 பிளாட்டுகளிலும் பல ஆவணங்கள் ஒப்படைக்கப்படாமலும், ஒப்பந்தப்படி வேலை முடிக்கப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல. சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு பல ஆண்டுகளாக அவர் குடியிருந்து வருகிறார். DGM கெஜலட்சுமி என்ற பிளாட்டில் கட்டப்பட்ட வீட்டை இடிக்க வேண்டுமென்று முனிசிபல் கமிஷ்னரிடமிருந்து அறிக்கை வந்துள்ளது என்றால் இதுபோன்று எதுவும் வரவில்லை, தற்போது வரை அந்த வீட்டின் சுவாதீனத்தை பிரதிவாதி அனுபவித்து வருகிறார். உரிய அனுமதி பெறாமல் வீடு கட்டியுள்ளேன் என்று முதன்மை கமிஷனரிடமிருந்து காரணம் கேட்டு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை